செய்தி வெளியீடு எண்: 382 நாள் : 05.08.2015

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சென்னை எம்.ஆர்.சி நகர்– சென்னை குடிநீர் வாரிய மைலாப்பூர்– நந்தனம் குடிநீர் பகிர்ந்தளிக்கும் நிலையத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணிஅவர்கள் நேரில் ஆய்வு.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் **சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் கீழ் செயல்படும்** எம்.ஆர்.சி **நகரில் உள்ள மைலாப்பூர்– நந்தனம் குடிநீர் பகிர்ந்தளிக்கும் நிலையத்தில்** இன்று (5.8.2015) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த குடிநீர் பகிர்ந்தளிக்கும் நிலையத்திற்கு நெம்மேலியில் உள்ள கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் 50 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்படுகிறது. இந்நிலையத்திலிருந்து, சென்னை மாநகரப் பகுதிகளான திருவல்லிக்கேணி, இராயப்பேட்டை, ஐஸ்அவுஸ், மைலாப்பூர், நந்தனம், மந்தைவெளி, ராஜா அண்ணாமலைபுரம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் 45 மில்லியன் லிட்டர் குடிநீர் குழாய்கள் மூலமாக அதிகாலை 3.00 மணி முதல் காலை 9.00 மணி வரையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும், இந்த குடிநீர் பகிர்ந்தளிக்கும் நிலையத்திலிருந்து நாள்தோறும் 6000 மற்றும் 9000 லிட்டர் கொள்ளளவுகள் கொண்ட 10 குடிநீர் லாரிகள் மூலம் தினமும் 100 முதல் 110 நடைகள் வரை மொத்தம் 1.50 மில்லியன் லிட்டர் குடிநீர் தினமும் காலை 6.00 மணி முதல் மாலை 7.00 வரையிலும் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிநீர் குழாய் இல்லாத மாநகர பகுதிகளில், பொது மக்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்குவதை உறுதி செய்யும் வகையில், மைலாப்பூர்– நந்தனம் குடிநீர் பகிர்ந்தளிக்கும் நிலையத்தில் லாரிகள் மூலம் குடிநீர் நிரப்புவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பொது மக்களுக்கு எவ்வித தங்கு தடையின்றியும், உரிய நேரத்தில் குடிநீர் கிடைக்கவும், தேவை ஏற்படின், லாரி நடைகளை உயர்த்தி குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.பி. சந்தர மோகன், இ.ஆ.ப., மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் முதன்மை பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நிர்வாக இயக்குநர்
சென்னைக் குடிநீர் வாரியம்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**